பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 07 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ரயில்வே பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பட்ஜெட்டில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யபபட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. மத்திய பட்.ஜெட்டில் ஜம்மு-கஷ்மீரின் வளர்ச்சிக்காக சுமார் 42 ஆயிரத்து 277 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் 15 கோடி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.
4. இங்கிலாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமிங் இன்று இந்தியா வருகிறார்.
5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ரயில்வே பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மத்திய பட்ஜெட்டில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ரயில்வே துறையை மேம்படுத்த ஒட்டுமொத்தமாக மத்திய பட்ஜெட்டில் இரண்டு லட்சத்து 62 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிதி ரயில்வேத் துறையை மேலும் மேம்படுத்த உதவும் என்று அவர் கூறியுள்ளார்.

பயணிகளின் வசதிகள் மற்றும் பாதுகாப்புக்காக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், ரயில்வே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் வரையப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைக்கும் பொறுப்பு வகிக்கும் திரு அஸ்வினி வைஷ்ணவ், தொலைத் தொடர்பு கருவிகளுக்கு சுங்க வரி குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், மின்னணு துறை மேலும் வளர்ச்சியடையும் என்று தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட் இந்திய பொருளாதாரத்தையும், இளைஞர்களின் சக்தியையும் ஒருங்கிணைக்கக்கூடிய சிறப்பான பட்ஜெட் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் சுமார் நான்கு கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக இரண்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்று கூறியுள்ளார்.

சுமார் மூன்று கோடி வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முத்ரா கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவி பத்து லட்சம் ரூபாயிலிருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய பட்.ஜெட்டில் ஜம்மு-கஷ்மீரின் வளர்ச்சிக்காக சுமார் 42 ஆயிரத்து 277 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது கடந்த நிதி ஆண்டைக் காட்டிலும் ஒன்று புள்ளி இரண்டு சதவீதம் அதிகமாகும்.

ஜம்மு-கஷ்மீர் பேரிடர் மேலாண்மை நிதிக்கு 279 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கு அமையவுள்ள இரண்டு மின் திட்டங்களுக்கு சுமார் 606 கோடி ரூபாயும், வெள்ளப்பாதிப்பு நடவடிக்கைகளுக்கு 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீர் காவல்துறை மேம்படுத்த ஒன்பதாயிரத்து 789 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மத்திய பட்ஜெட்டில் விளையாட்டுத்துறைக்கு மூவாயிரத்து 442 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

இதில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் கேலோ இண்டியா விளையாட்டுக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 20 கோடி ரூபாய் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேலோ இண்டியா மூலமாக மாநிலங்களில் விளையாட்டை ஊக்குவிக்கும் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு விளையாட்டு வீரர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் பொருளாதார வளர்ச்சியையும், புதுமைகளையும் ஏற்படுத்தும் பட்ஜெட் என்று ஐக்கிய அரபு அமிரகத்தில் உள்ள இந்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், டிஜிட்டல் துறையில் வளர்ச்சியை மேம்படுத்தவும் இந்த பட்ஜெட் வகை செய்வதாக உள்ளது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

தங்கத்திற்கான இறக்குமதி வரியானது ஆறு சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள அவர்கள், சட்ட முறைப்படி வெளிநாடுவாழ் இந்தியர்கள் அதிக அளவில் தங்கத்தை கொண்டு வருவதற்கு இது உதவிடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

குழாய்கள் மூலம் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்கள் 15 கோடி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

2019-ஆம் ஆண்டு மூன்று கோடியாக இருந்த இந்த இணைப்பு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 15 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளதாக தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு தூய்மையான, சுகாதாரமான குடிநீர் வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்று அவர் கூறியுள்ளார்.

எட்டு மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் இந்த திட்டம் 100 சதவீத அளவுக்கு முழுமை பெற்றுள்ளதாகவும் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இளநிலை மருத்துவ படிப்புக்கு இந்த ஆண்டு நடத்தப்பட்ட நீட் தேர்வுக்கு மறு தேர்வு நடத்த தேவையில்லை என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவை தாம் வரவேற்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய தேர்வுகள் முகமை நடத்தும் தேர்வுகள் எவ்வித முறைகேட்டிற்கும் இடமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படுவதாகக் கூறினார்.

நீட் தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரிய வரும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

தேசிய தேர்வுகள் முகமையை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழு நிபுணர்களின் கருத்துக்களை கேட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களை குழப்பும் வகையில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகவும், நாட்டின் கல்வித்துறை மீது அவர் களங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் திரு தர்மேந்திரபிரதான் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

இங்கிலாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமிங் இன்று இந்தியா வருகிறார்.

இங்கிலாந்தின் புதிய பிரதமராக திரு **Keir** ஸடாமர் பதவியேற்றபின் முதல் முறையாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தியா வருகிறார்.

இன்று மாலை புதுதில்லி வரும் அவர், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து உரையாடுகிறார்.

பின்னர் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் ஆகியோரை இங்கிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்து பேசுகிறார்.

அதன் பின்னர் பிரதமர் திரு நரேந்திரமோடியையும் சந்தித்து அவர் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின்போது அவர் விவாதிக்கிறார்.

**[]<<<>>>[]**

முப்படை தளபதி ஜெனரல் அனில் சௌஹான், இஸ்ரேல் பாதுகாப்புத்துறை தலைமை இயக்குநர் திரு ஈ எல் ஜமீர்-ஐ சந்தித்து இருதரப்பு பாதுகாப்பு உறவுகள் குறித்து விவாதித்தனர்.

இது தொடர்பாக பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இரு நாடுகளும் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கும் என்று தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா-வை புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பிம்ஸ்டெக் கொள்கைகள் குறித்தும், கிழக்கு சட்டங்கள் குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தையொட்டியுள்ள பிற நாடுகளுடனான அணுகுமுறைகள் குறித்தும் அவர் ஆலோசனை நடத்தியதாக திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

வருமான வரி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1860-ஆம் ஆண்டு ஜூலை 24-ஆம் தேதி ஆங்கிலேயர்களால் வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவு கூறும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

வருமான வரி மூலம் பெறப்படும் நிதி, நாட்டின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**[]<<<>>>[]**

கஷ்மீரில் உள்ள அமர்நாத் குகைக் கோவிலை தரிசிப்பதற்காக இன்று அதிகாலை இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு யாத்திரிகர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

103 வாகனங்களில் இவர்கள் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த யாத்ரிகர்கள் குழுவில் இரண்டாயிரத்து 194 ஆண்கள், 598 பெண்கள், 11 குழந்தைகள் அடங்குவர்.

**[]<<<>>>[]**

எத்தியோப்பியா நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் 229 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தெற்கு கீஸிகோஃபா பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் கனமழை காரணமாக இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாகவும், அப்பகுதியில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

குஜராத், கோவா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கங்கை ஆற்றுப்பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை மொழிவு அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இமாச்சல பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், தில்லி, பஞ்சாப் மற்றும் உத்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் தம்புலாவில் நேற்று நடைபெற்ற நேபாள அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி 82 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 178 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய நேபாள அணி 20 ஓவரில் 98 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இந்த போட்டியில் இந்தியா வெற்றிபெற்றதை அடுத்து அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**[]<<<>>>[]**

பாரீஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

இதையொட்டி கால்பந்து மற்றும் ரக்பீ-செவன்ஸ் லீக் ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

முதல் ஆட்டத்தில் அர்ஜெண்டினா - ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன.

**[]<<<>>>[]**

ஆஸ்திரிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் – ஸ்பெயினின் மார்ட்டினஸ்-ஐ எதிர்கொள்கிறார்.

***End of News***